

மாங்காடு நகர தி.மு.க. பொது உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம் நகரக் கழகச் செயலாளர் – நகர மன்றத் துணைத் தலைவர் பட்டூர் எஸ். ஜபருல்லா தலைமையில் நடைபெற்றது. இதில் மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் சிறப்புரையாற்றினார். இதில் தேர்தல் தொகுதி பார்வையாளர் கே.ஜி.பாஸ்கர் சுந்தரம், எம்.ஆர்.சீனிவாசன், ஜி.ராமு, ரா.பாஸ்கர், சி.எம்.வில்லியம்ஸ், எம்.எஸ்.மகேந்திரன், சுசீலா, கே.ஜி.சங்கர், ஆர்.சாரதி, டி.பெருமாள் ராஜ் உள்ளிட்ட கழகத்தினர் பங்கேற்றனர்.



திருப்பத்தூர் மாவட்ட திமுக மாணவரணி சார்பில் நடைபெற்ற மொழிப்போர் தியாகிகள் வீரவணக்கநாள் மாபெரும் பொதுக்கூட்டத்தில் மாணவரணி மாநில செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ. மாவட்ட செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ. தலைமைக் கழக பேச்சாளர்கள் எ.ராஜசேகர், தாவூத் அபூபக்கர் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்கள். மாவட்ட மாணவரணி அமைப்பாளர் தே.பிரபாகரன் தலைமையில் நகர கழக செயலாளர் சு.ராசேந்திரன் வரவேற்புரை நிகழ்த்தினார். இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர்கள் அ.நல்லதம்பி, அ.செ.வில்வநாதன் மற்றும் ஆர்.எஸ்.ஆனந்தன், டி.கே.மோகன், ஆ.சம்பத்குமார், சாந்திசீனிவாசன், கே.பி.ஆர். ஜோதிராஜன் மற்றும் பலர் பங்கேற்றனர்.

நெல்லை கிழக்கு மாவட்டத்தில்

# மொழிப் போர்த் தியாகிகளுக்கு வீரவணக்க நாள் பொதுக்கூட்டம்!

## பேராசிரியர் சுப.வீரபாண்டியன் - இரா.ஆவுடையப்பன் சிறப்புரை!

நெல்லை.ஜன.27.

நெல்லை கிழக்கு மாவட்டம்,மாவட்ட மாணவர் அணி சார்பில் விக்கிரம சிங்கபுரம் நகரத்தில் மொழிப் போர்த் தியாகிகளுக்கு வீர வணக்க நாள் பொதுக்கூட்டம் விக்கிரமசிங்கபுரம் மேலரதவீதியில் நகர செயலாளர் கி.கணேசன் தலைமையில் மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் சீனிதாஸ், லட்சுமணன்,ராஜதுரை ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் அலெக்ஸ் அப்பாவு வரவேற்புரையாற்றினார்.

மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் பிரபாகரன் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார்.

இந்நிகழ்வில் திராவிட இயக்க தமிழர் பேரவை பொதுச் செயலாளர் பேராசிரியர் சுப.வீரபாண்டியன், நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன் ஆகியோர் பங்கேற்று எழுச்சி பேருரை ஆற்றினர்.

நிகழ்வில் திராவிட இயக்க தமிழர் பேரவை பொதுச் செயலாளர் பேராசிரியர் சுப.வீரபாண்டியன் பேசியதாவது:-

மேடையின் அருகே மொழிப்போர்த் தியாகிகளின் படங்கள் வைக்கப்பட்டுள்ளது. அது படம் அல்ல நமக்கு கற்றுக் கொடுக்கும் பாடம். மொழிக்காக உயிர் கொடுத்தார்கள் என்றால் வரலாற்றில் இது போன்ற தியாகத்தை யாரும் செய்ய முடியாது.திருப்பூரில் இந்தி எதிர்ப்பு போராட்டம் தொடர்பாக ஒரு கூட்டம் நடந்தபோது 14 வயது சிறுவன் அங்குள்ள அஞ்சலகத்தில் எழுதப்பட்டிருந்த இந்தி எழுத்தை அழித்தான், என்பதற்காக காவல் துறையால் சுட்டுக் கொல்லப்பட்டான், அது போன்று மயிலாடுதுறையில் நடந்த போராட்டத்தில் சங்கரய்யா என்பவர் உடம்பு மீது நெருப்பு வைத்து தன்னை மாய்த்துக் கொண்டார்.இதுபோன்று ஏராளமானவர்கள் மொழிக்காக தங்கள் உயிரை இழந்துள்ளனர் 60 ஆண்டுகளுக்கு பிறகும் மொழிப்போர்த் தியாகிகளை நினைவு கூரும் விதமாக கொண்டாடுவதால் தி.மு.க.மக்கள் இயக்கமாக இன்றும் நிலைத்து நிற்கிறது. இந்த உணர்வு என்பது தேர்தலுக்காக மட்டுமல்ல மக்களுக்காக மொழிக்காக ஆனது.

ஒரு புறம் அ.தி.மு.க. வினரும் சம்பிரதாயத்திற்காக வீர வணக்க நாள் பொதுக்கூட்டம் நடத்தி வருகின்றனர். அந்த கூட்டங்களில் பெரும்பாலான இடங்களில் ரெக்கார்ட் டான்ஸ் போடப்படுகிறது.1918 ஆம் ஆண்டு சென்னையில் இந்தி பிரச்சார சபாவை காந்தி திறந்து வைத்தார்.ஆனால் அதை யாரும் எதிர்க்கவில்லை. இந்தி மொழி திணிப்பைதான் எதிர்த்து போராட்டம் நடைபெற்றது.தமிழகத்தைப் பொறுத்தவரை இரு மொழிக் கொள்கை தான்.ஆகையால்தான் தமிழ், ஆங்கிலம் படித்த நம்மவர்கள் உலக நாடுகளில் உயர்ந்த பணிகளில் இருக்கின்றனர். இந்தி மொழி மட்டும் பேசிய இவர்கள் கூலித் தொழிலாளியாக இருந்து வருகின்றனர்.

தந்தை பெரியார்,பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் வழியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழகத்தில் திராவிடம் மாடல் ஆட்சியை நடத்தி வருகிறார்.தி.மு.க.வின் ஐம் பெரும் கொள்கைகளில் ஒன்று இந்தியை எதிர்ப்பது,இந்தியை அன்றும் எதிர்த்தோம்,இன்றும் எதிர்ப்போம், என்றும் எதிர்ப்போம்.

இவ்வாறு பேராசிரியர் சுப. வீரபாண்டியன் பேசினார்.

முன்னதாக நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன் பேசியதாவது:-

மொழிப்போர்த் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் நடத்துவதற்கு தி.மு.க.விற்கு மட்டுமே தகுதி உள்ளது. ஏனென்றால் மொழிப் போர் தொடர்பான போராட்டங்களில் திராவிட இயக்கங்களே பங்கேற்றுள்ளன. தி.மு.க. ஆரம்ப காலம் முதல் இந்தி திணிப்பை எதிர்த்து வருகிறது. தனித்துவம் இல்லாத ஒரு மொழி இந்தி மொழி,தமிழ் மொழி என்றால் அதற்கு இலக்கியம் வரலாறு ஆகிய பெருமைகள் உண்டு.தனித்து இயங்கக்கூடிய ஆற்றலும் தமிழ் மொழிக்கு உண்டு.ஆனால் ஆறு மொழிகளை இணைத்து உருவான ஒரு கலப்பு மொழி தான் இந்தி. இந்தி படிப்பதை நாம் எதிர்க்கவில்லை. இந்தி திணிப்பையே நாம் எதிர்க்கிறோம். திராவிட மாடல் தி.மு.க ஆட்சி மக்களுக்கான ஆட்சி,கடந்த அ.தி.மு.க. வின் பத்தாண்டு கால ஆட்சியில் எந்த ஒரு நலத் திட்டங்களும் செயல்படுத்தப்படவில்லை.

ஆனால் திராவிட மாடல் ஆட்சி நடத்தி வரும் கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்று மூன்றாண்டுகளில் ஏராளமான திட்டங்கள் மக்களுக்காக செயல்படுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. வருகிற காலங்களிலும் மக்கள் நலத் திட்டங்கள் தொடர 2026 லும் திராவிட மாடல் ஆட்சி, எல்லோருக்கும் எல்லாம் கிடைத்திட தி.மு.க.ஆட்சி மலர மக்கள் உறுதுணையாக இருக்க வேண்டும்.

இவ்வாறு நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் பேசினார்.

நிகழ்ச்சியில் தலைமைக் கழகப் பேச்சாளர் மதுரை குருசாமி,தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஆ.பிரபாகரன்,சா.ஞானதிரவியம், சித்திக்,கே.கே.சி. பிரபாகரன்,மாநில நிர்வாகிகள் ராஜம்ஜான்,ஆவின் ஆறுமுகம்,கணேஷ்குமார் ஆதித்தன், மாவட்ட துணை செயலாளர்கள் நம்பி, மாஞ்சோலை மைக்கேல், ஒன்றிய செயலாளர்கள் பரணி சேகர், பி.சி.ராஜன், போர்வெல் கணேசன், முத்துப்பாண்டி என்ற பிரபு, முத்துக்கிருஷ்ணன், களக்காடு நகரச் செயலாளர் மணி சூரியன், இளைஞரணி அமைப்பாளர் ஜான்ரபீந்தர்,வழக்கறிஞர் அணி அமைப்பாளர் செல்வ சூடாமணி, இசக்கிபாண்டியன், அதியமான்,ரவி, ஐயப்பன், நெடுஞ்செழியன், நகர்மன்றத் தலைவர் செல்வ சுரேஷ் பெருமாள், உள்பட கழக முன்னோடிகள், கழக நிர்வாகிகள், மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சி நிறைவில் நகர மாணவர் அணி விக்னேஷ் நன்றியுரை யாற்றினார்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை நெல்லை கிழக்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் அலெக்ஸ் அப்பாவு செய்திருந்தார்.


